the Central Government shall by notification in this official Gazette constitute a Water Dispute Tribunal for the adjudication of the water dispute.'

என்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் பேசிய நேரத்தில் அதற்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் எந்த விடையும் பகர்ந்தாரில்லை.

திரு. கே. எல். ராவ் அவர்கள் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை தனக்கு மேல் மட்டத்தில் உள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை, ஆகவே இன்னும் பேச்சுவார்த்தைகளுக்கு இடம் இருக்கிறது என்று கருதுவார்களேயானால் இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மைசூரில் நடைபெற்ற தேர்தலின் போது வெளிப்படையாகவே ஒரு கூட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நடுவர் தீர்ப்பைத் தவிர இந்தக் காவிரிப் பிரச்சினைக்கு வேறு வழியில்லை என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவிற்கும் பிறகு நாம் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டுமென்று கேட்பது நியாயத்திற்கு புறம்பானதா? நீங்கள் அணைகளைக் கட்டிக்கொள்ளுங்கள், எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பாதிக்கப்படாமல் அதற்கு உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்பது நியாயத்திற்குப் புறம்பானதா என்பது தெரியவில்லை. ஆகவே நியாயத்தைச் சந்திக்க மத்திய அரசு இன்று தவறியிருக்கிறது என்பதை நானும் எடுத்துக் காட்ட அந்த அளவிற்கு இங்கு தரப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த விளக்கங்களைத் தர வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேலும் இதுபற்றிய விவாதத்தை விரைவில் நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட இருப்பதால் இந்தத் தீர்மானத்தை இதற்கு மேல் விவாதிப்பதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன் என தலைவர் அவர்களே, தங்களிடம் எடுத்துச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனவே இந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

4. அவையுரிமை மீறல்

மக்களவையில் திரு. சிவப்பா அவர்கள் காவரி நீர்த் தகராறு பற்றி தமிழ்நாட்டின் நிலை குறித்து விமர்சித்து உபயோகித்த வார்த்தைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தைச் சொல்கிறபோது லோக் சபாவில் நடைபெற்ற விவாதத்தில் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த லோக் சபா உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகள் இந்த மன்றத்தினுடைய மதிப்பைக் குறைப்பதாக எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன வார்த்தைகளும், பத்திரிகையில் வந்து இருக்கும் வார்த்தைகளும், உண்மையிலேயே அங்கே சொல்லப்பட்டு இருக்குமானால் அந்த லோக் சபா உறுப்பினர் திரு. சிவப்பா . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. அந்த ப்ரோசிடிங்சில் அந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி, 'கலாட்டா', "ஹல்லா-ஹுல்லா" என்று எல்லாம் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட வார்த்தைகள் உபயோகிப்பது உண்மையிலேயே affects the dignity of the House and will constitute contempt of the House இந்த அவையின் கண்ணியத்தை பாதிப்பதாகும். Therefore prima facie there is breach of privilege. அதிலே கொஞ்சம் கூட சந்தேகம் கிடையாது. இந்த மன்றத்திற்கு என்று உரிமைகள் உண்டு. இந்த மன்றத்திற்கு என்று கண்ணியம் உண்டு. இந்த மன்றத்தின் கண்ணியத்தையும், உரிமைகளையும் மீறுவதற்கோ, அவமதிப்பதற்கோ இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கோ, வேறு மன்றத்தின் உறுப்பினருக்கோ உரிமை கிடையாது. இந்த மன்றத்தின் உரிமைகளைக் காக்கும் பெரிய பொறுப்பு பேரவைத் தலைவர் என்ற முறையில் எனக்கு இருக்கிறது. அந்த வகையில் வெளியிலோ, லோக் சபையிலோ அல்லது வேறு மன்ற உறுப்பினர்களோ இப்படிப்பட்ட அவை உரிமை மீறிய செயலைச் செய்கிற நேரத்திலே அதற்காக என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதாவது, அவற்றை அந்த லோக்-சபை சபாநாயகருக்கு 'ரெஃபர்' செய்ய வேண்டுமென்று முறை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன விவரத்தை அந்த வகையில், அந்த உறுப்பினர் வார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, மேல் நடவடிக்கை எடுப்பதற்கு லோக்-சபையின் சபாநாயகருக்குத் தெரியப்படுத்த இருக்கிறேன் என்று இந்த அவைக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

I will refer this matter to the Hon. Speaker of the Lok Sabha for appropriate action.

Thiru R. PONNAPPA NADAR : The reply received from that House, viz. Lok Sabha may also be placed before this House.

Mr. SPEAKER : Certainly that will be done.

(5) அறிக்கைகள் அளித்தல்

(அ) சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாம் அறிக்கை

Thiru P. SEENIVASAN : Sir, I present the Second Report (Fifth Assembly) of the Committee on Subordinate Legislation.

(ஆ) அரசின் உறுதி மொழிக் குழுவின் முதலாவது அறிக்கை

Thiru MANALI C. KANDASAMY : Sir, I present the First Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.